தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 247/ந/2023
நாள் 03.10.2023

திரு. M. சங்கரலிங்கம்,
கோவில்பட்டி,
தூத்துக்குடி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
கோவில்பட்டி நகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, தெற்கு புதுக்கிராமம் 3வது தெரு, கதவு எண்.3 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. சங்கரலிங்கம் என்பவரின் 07.08.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.08.2023 அன்று பெறப்பட்டு 247/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, தெற்கு புதுக்கிராமம் 3வது தெரு, கதவு எண்.3 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. சங்கரலிங்கம் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“நான் வசிக்கும் புதுக்கிராமம் பகுதியில் நகராட்சி நிர்வாகத்தின் மூலம் மக்கள் நலத்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதுசமயம் TN96 C8622 பதிவு எண் கொண்ட J.C.B. வாகனத்தைக் கொண்டு கழிவுநீர் கால்வாய் சுத்தம் செய்யும் பணிகளை

நகராட்சியினர் மேற்கொள்ளும்போது நகராட்சியால் எனக்கு வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பு 137/008/00461 துண்டிக்கப்பட்டுவிட்டது. துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்பு நகராட்சி மூலம் சரி செய்யப்படும் என பணி மேற்பார்வையாளர்கள் கூறினார்கள். பத்து தினங்களுக்கு மேலாகியும் துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்பு சரி செய்யப்படவில்லை. ஆகவே, இதுகுறித்து நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு 26.06.2023–ல் விண்ணப்பம் செய்தும், பத்து தினங்களாக எவ்வித தகவலும் வழங்கப்படாததால் மீண்டும் 07.07.2023 அன்று நினைவூட்டல் விண்ணப்பம் கொடுத்தும், இதுநாள்வரை எவ்வித தகவல்களும் வழங்கவில்லை.

குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்ட நாளிலிருந்து இதுநாள் வரை தொடர்ந்து சில ஆயிரம் ரூபாய் செலவு செய்து தண்ணீரை விலைக்கு வாங்கித்தான் பயன்படுத்தி வருகிறோம். இனிமேலும் தண்ணீர் விலைக்கு தொடர்ந்து வாங்க போதுமான பொருளாதார வசதிகள் எங்களிடம் இல்லை. வேறு நீர் ஆதாரங்களும் கட்டடத்தில் இல்லை.

ஆகவே, இந்த விண்ணப்பம் தங்கள் பார்வைக்கு வந்தவுடன், கனிவுடன் பரிசீலித்து துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்பை உடனடியாக சரி செய்து வழங்க நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு உத்தரவிட தாழ்மையுடன் வேண்டுகிறேன். மேலும், குடிநீருக்காக நாங்கள் செலவு செய்த வகைக்காக நியாயமான இழப்பீட்டுத் தொகை வழங்கவும் உத்தரவிட வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 23.08.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் கோவில்பட்டி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் தனது 08.09.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:–

"கோவில்பட்டி நகராட்சி வார்டு எண்.7–ல், கதவு எண்.3, தெற்கு புதுக்கிராமம், 3வது தெரு, திரு.எம்.சங்கரலிங்கம் என்பவரின் 17.07.2023 நாளிட்ட கடிதத்தில், குடியிருப்பு குழாய் இணைப்பு எண்.137/008/00461 மேற்படி பகுதியில் கழிவுநீர் வாறுகால் தூர்வாரும்போது சேதம் அடைந்ததை பழுது நீக்கம் செய்துதரக் கோரியுள்ளார்.

மனுதாரரின் குடியிருப்பு பகுதியில் கழிவுநீர் வாறுகால் தூர்வாரும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று, தற்போது முடிவுற்றுள்ளதால் அன்னாரின் குடியிருப்பு குழாய் இணைப்பை கடந்த 05.09.2023 ஆம் தேதி கோவில்பட்டி நகராட்சி பணியாளர்கள் மூலம் சரி செய்து, மேற்படி குழாய்

இணைப்பில் குடிநீர் சீராக வருகிறது என்ற விபரம் மன்றத்திற்கு பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது. மேற்படி பணிகளுக்குரிய புகைப்பட நகல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், திரு.எம்.சங்கரலிங்கம் என்பவரின் பதிலுரையில் கோவில்பட்டி நகராட்சி பணியாளர்களுக்கு நன்றி தெரிவித்து அனுப்பியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு இத்துடன் சமர்ப்பிக்கப்படுகிறது என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது''.

**(3) மனுதாரரும் மற்றும் கோவில்பட்டி நகராட்சி ஆணையரும் 11.09.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.09.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**(4) மனுதாரர் திரு.எம்.சங்கரலிங்கம் 11.09.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

''தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி நகராட்சி மூலம் கால்வாய் சுத்தம் செய்யும் பணிகளை JCB இயந்திரம் மூலம் மேற்கொள்ளும்போது எனக்கு வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பு உடைக்கப்பட்டு குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. இது குறித்து நகராட்சியில் மனு அளித்தும், அதனைத் தொடர்ந்து நினைவூட்டுக்கள் அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் விரைவில் எடுக்கப்படவில்லை. இம்முறை மன்றத்திற்கு எனது மனுவை அனுப்பிய பின்னரே எனது குடிநீர் குழாய் பழுது நீக்கம் செய்யப்பட்டது. ஆனால், பழுது நீக்கத்திற்கான செலவுக் கட்டணத்தை செலுத்துமாறு வாய்மொழி உத்தரவு மூலம் என்னை பணித்ததன் பேரில் மேற்கண்ட பழுது நீக்க செலவாக ரூபாய் 1340/– செலுத்திய பின்னரே குடிநீர் குழாய் பழுது நீக்கம் செய்யப்பட்டது என்கின்ற விவரத்தையும், மேற்கண்ட குழாய் பழுது ஏற்பட்டதால், குடிநீரை விலை கொடுத்து வாங்கினேன் என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**(5) எதிர்மனுதாரரான கோவில்பட்டி நகராட்சி ஆணையாளருக்கு பதிலாக கோவில்பட்டி நகராட்சிப் பொறியாளராகப் பணிபுரியும் திரு.ர.சனல்குமார் என்பவர் 11.09.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

''மனுதாரரின் குடியிருப்புப் பகுதியில் கழிவுநீர் வாறுகால் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளும்போது மனுதாரரின் குடிநீர் குழாய் இணைப்பு பாதிப்பட்டிருந்த நிலையில், மேற்கண்ட குடிநீர் இணைப்பு 5.9.2023 அன்று நகராட்சியினரால் பழுது நீக்கம் செய்யப்பட்டு,

மேற்கண்ட குடிநீர் இணைப்பில் தற்போது குடிநீர் சீராக வருகிறது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், கோவில்பட்டி நகராட்சி ஆணையரின் அறிக்கை, கோவில்பட்டி நகராட்சிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:-

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions namely:-

7 (c) where the irregularity is due to willful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது:

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியைச் சார்ந்த மனுதாரர் திரு.M.சங்கரலிங்கம் என்பவர் தனது 07.08.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் கோவில்பட்டி நகராட்சியில் கழிவுநீர் கால்வாயை JCB இயந்திரம் மூலம் சுத்தம் செய்யும் பணிமேற்கொள்ளும்போது, தனது வீட்டிற்கான குடிநீர் இணைப்பினை துண்டித்தும், மேற்படி கால்வாயை சுத்தம் செய்து பணி முடிவுற்றபோதும், துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்பு மீண்டும் நகராட்சியால் அளிக்கப்படவில்லை என புகார் தெரிவித்துள்ளார்.

கோவில்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7, தெற்கு புதுக்கிராமம், 3வது தெருவில் JCB இயந்திரம் மூலம் கழிவுநீர் வாறுகால் தூர்வாரும் போது மனுதாரரின் குடியிருப்பு குடிநீர் இணைப்பு நகராட்சியால் துண்டிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்பினை சரி செய்யக்கோரி மனுதாரர் 26.06.2023 அன்று நகராட்சியில் முறையிட்டும் மற்றும் 07.07.2023 அன்று நினைவூட்டு விண்ணப்பம் அளித்தும் கோவில்பட்டி நகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

நகராட்சியில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத நிலையில், மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் 07.08.2023 நாளிட்ட முறையீட்டு மனு சமர்ப்பித்தைத் தொடர்ந்து. இப்புகார் மனு குறித்து கோவில்பட்டி நகராட்சி ஆணையாளரிடம் 23.08.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

இம்முறைமன்ற நடுவத்தால் அறிக்கை கோரப்பட்ட பின்னரே, அவசர அவசரமாக கோவில்பட்டி நகராட்சியினர் மனுதாரர் புகாராக தெரிவித்த, துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்பை 05.09.2023 அன்று சரிசெய்து மீண்டும் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர், குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டவுடன் ஜூன் 2023–ல் நகராட்சியில் புகார் தெரிவித்தும் மற்றும் நினைவூட்டு மனு சமர்ப்பித்தும் பழுதினை சரிசெய்யாமல் இம்முறைமன்ற நடுவ விசாரணையை எதிர்கொள்ளும் தருணத்தில் செப்டம்பர் 2023–ல் குடிநீர் இணைப்பு சரிசெய்து வழங்கப்பட்டதன் மூலம் மனுதாரர் 3 மாதக் காலத்திற்கு தனது அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான குடிநீர் கிடைக்க பெறாமல், நகராட்சியினரின் செயல்களின் மூலம் மனுதாரர் அலைகழிக்கப்பட்டுள்ளார் என்பது தெள்ளத்தெளிவாக தெரிய வருகிறது.

இவ்வாறு மனுதாரர் புகார் தெரிவித்தவுடன், குடிநீரின் முக்கியத்துவம் கருதி உடனடி நடவடிக்கை மேற்கொள்ளாமல் 3 மாத காலமாக மெத்தனமாகவும், பொறுப்பற்ற முறையிலும், குடிநீர் இணைப்பு காலதாமதமாக வழங்கக் காரணமாக இருந்த கோவில்பட்டி நகராட்சி இளநிலைப் பொறியாளர் மற்றும் சம்பந்தப்பட்ட பிற அலுவலர்கள் மீதும் உரிய விதிகளின்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

Such thick – skinned approach to field issues like this brings bad reputation to the image of the Kovilpatti Muncipality needlessly. This could have been avoided had the Municipal Commissioner and Engineer attended to the complaint in time. The delay of 3 months in the process has aggravated the economic distress of the petitioner besides causing mental agony due to stoppage of drinking water supply to

his house. If the petitioner moves the Consumer Court for remedy and relief the Local Body may have to face embarrassment.

2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. M. சங்கரலிங்கம்,
எண்.3, தெற்கு புதுக்கிராமம் 3வது தெரு, கோவில்பட்டி – 628 501,
தூத்துக்குடி மாவட்டம்.

2) ஆணையாளர், கோவில்பட்டி நகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்,
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்